மே 2022 -ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of May 2022)

036614

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண். 12423/பக5(1)/2022-1, நாள் 19.05.2022**

24 MAY 2022

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா/ அம்மையீர்,

பொருள் பள்ளிக் கல்வி – தற்காலிகப் பணியிடங்கள் 2009-2010-ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்ட அரசு /நகராட்சி /மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரை பிரித்து துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு 912 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டது - இப்பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்கக் கோருதல்-சார்பு.

பார்வை

1. அரசாணை (நிலை)எண். 101, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள்.15.05.2008.
2. அரசாணை (நிலை)எண். 109, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள்.04.05.2009.
3. அரசாணை (நிலை)எண். 162, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள்.13.07.2009
4. அரசாணை (நிலை)எண். 101, பள்ளிக் கல்வி (மேநிக2)த் துறை, நாள் 24.04.2009.
5. அரசாணை (நிலை)எண். 170, பள்ளிக் கல்வி (மேநிக2த்) துறை, நாள்.15.07.2009.
6. அரசாணை (நிலை)எண். 232, பள்ளிக் கல்வி (இ1)த் துறை, நாள் 11.08.2010.
7. அரசாணை (1டி)எண். 297, பள்ளிக் கல்வி (பக5(1)த் துறை, நாள், 24.04.2018.
8. அரசாணை (1டி)எண். 264, பள்ளிக் கல்வி (பக5(1)த் துறை, நாள், 23.07.2019.

9. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 005180/ எல்/இ3/2022 நாள் 16.05.2022.

**********

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், 2008-09-ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தப்பட்டும், அவ்வாறு நிலையுயர்த்தப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளுக்கு 2008-09ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2009-10ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் நிலையுயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு 500 முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், 2009-2010-ஆம் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டும், இப்பள்ளிகளுக்கு 2009-10ம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் மற்றும் 2010-11ஆம் கல்வியாண்டில் 100 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 2009-2010ஆம் கல்வியாண்டில் 15 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டும், இப்பள்ளிகளுக்கு 2009-10ம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 2010-11 ஆம் கல்வியாண்டில் 15 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. பார்வை நான்கு மற்றும் ஐந்தில் காணும் அரசாணைகளில், 2009-2010-ஆம் கல்வியாண்டில் முறையே 100 மற்றும் 15 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டும், இப்பள்ளிகளுக்கு பள்ளிக்கு 5 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 575 (115x5=575) முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டது.

5. பார்வை ஆறில் காணும் அரசாணையில், 2009-10-ஆம் கல்வியாண்டில் அரசு மேல்நிலைப் பள்ளிகளை பிரித்து துவக்கப்பட்ட 7 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு 7 தற்காலிக தலைமை ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

6. பார்வை எட்டில் காணும் அரசாணையில், மேற்காணும் பணியிடங்களில் 912 தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2019 முதல் 31.12.2021 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7. மேற்காணும் 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு 31.12.2021 உடன் முடிவுற்ற நிலையில், இப்பணியிடங்களுக்கு 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

8. மேற்குறிப்பிட்டுள்ள 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், பார்வை இரண்டு முதல் ஆறு வரை உள்ள அரசாணைகளின்படி ஒப்பளிப்பு செய்யப்பட்ட 912 தற்காலிகப் பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான மே-2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

திரு. தமிழரசி

அரசு முதன்மைச் செயலாளருக்காக

19.05.22

**நகல்**

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35.
நிதித் (கல்வி-II) துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இவ்வலுவலக ந.க.எண். 005180/எல்/இ3/2022 நாள்: 24.5.2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

24.5.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

24/5/2022